Phone No 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (12—5—50) வெளியீடு (13—5—50) [இதழ் 250

மத்திய சர்க்கார் பலம் மகத்தான பலமாக வேண்டுமாம்!

புத்தாட்சியில் புது பலம் பெற்றுவிட்டார்களாம்!

1935-ம் ஆண்டு அரசியலுக்கு ஆரத்தி எடுக்கின்றனர்

யதேச்சாதிகார ஆட்சிக்குப் புதிய சப்பைக்கட்டு

அன்று கசந்தது; இன்று இனிக்கிறதாம்

அமைச்சராகப் போகும் முன்ஷியாரின் அர்த்தமற்ற வாதம்

இந்தியா ஒரே நாடாகவும், பலம் பொருந்திய நாடாகவும் திகழவேண்டுமானால், மத்திய ஆட்சியின் அடக்கி ஆளுந்திறமை இன்னும் அதிகரிக்கவேண்டும்.

காங்கிரஸ், இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகிற அதே அடிப்படையில்தான், இந்திய அரசியல் அமைப்பும் அமையவேண்டும். ஆகவேதான், 1935-ம் ஆண்டு இந்திய அரசியல் திட்டத்தை அமைத்துள்ளனர்.

இந்தப் புதிய ஆட்சி முறையில் மத்திய ஆட்சிக்கே அதிக அதிகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கு வெளி நாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் ஏற்படவிருக்கும் ஆபத்துகளைப் பற்றி எண்ணிப் பார்க்கையில், மத்திய ஆட்சியைப் பலப்படுத்த வேண்டியது மிக மிக இன்றியமையாததெனத் தோன்றுகிறது.

தற்கால உலகப்போக்கு, அமெரிக்காபோன்ற நாடுகளைக்கூட மத்திய ஆட்சியைப் பலப்படுத்தும்படி தூண்டுகிறது. இத்தகைய உலக அனுபவத்தை ஒட்டியே இந்திய அரசியல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்[illegible]

இவை, இந்[illegible] மந்தி[illegible] தற்காக இங்கிலாந்திலிருந்து புறப்பட்டபோது தோழர் கே. எம். முன்ஷி வெளியிட்டுள்ள கருத்துக்களாகும். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"இன்று உலகில் பொருளாதாரப் போராட்டம் வலுப்படிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அமைதியின்மை காணப்படுகிறது. இந்நிலையிலே, பாராளும் மன்றத்துக்கு அடக்கியாளும் அதிகாரம் அதிகமாகத் தேவைப்படும்.

நாடுகள் ஒன்றையொன்று தழுவி வாழவேண்டிய இந்நாளில், பொருளாதார உறவு மத்திய ஆட்சியிடமே இருக்கவேண்டியது அவசியம்" என்றும் பேசியுள்ளார்.

தோழர் முன்ஷி வெளியிட்டுள்ள இக்கருத்து புதிய கருத்து அல்லவாயினும், இந்திய அரசியல் ஏறக்குறைய ஒரு சர்வாதிகார அரசியலாக அமைந்துள்ளது என்று, அரசியல் அறிஞர்கள் வெளியிட்டுள்ள கருத்தை ஆக்கமளிக்கும் முறையிலே அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டவே, ஈண்டு அவரது கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறோம்.

அமைச்சராகப்போகும் ஆர்வத்தில் தோழர் முன்ஷி, இந்திய அரசியலை அசல் சர்வாதிகார அரசியலாக்க விழைகிறார் போலும்!

மத்திய ஆட்சி மாபெரும் பலத்துடன் திகழ வேண்டிய அவசியம் வந்துவிட்டதாம். [illegible] இந்தப் பாடத்தைத்தான் போதிக்கிறதாம் முன்ஷியாருக்கு! அதற்கு ஆதாரங்களை அள்ளி அள்ளி வீசுகிறார்; பொருளாதாரப் போராட்டங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை அடக்க ஆட்சி பலம் தேவை என்று வாதிடுகிறார். அயல்நாடுகளுடன் கொள்ளும் பொருளாதார உறவும், மத்திய ஆட்சி மூலமே நடைபெறவேண்டுமாம்.

நிரம்ப சரி, முன்ஷியார் இந்திய அரசியலுக்குப் பலமான முள்வேலி போடுகிறார் என்பதை நாம் அறிவோம். ஆனால் இத்தகைய வேலி அவசியந்தானா, போடக்கூடிய வேலிதானா, போட்டாலும் நிலைத்து நிற்கக் கூடியதுதானா என்பன போன்ற விஷயங்களை அவர் ஆராய்ந்திலர்.

மத்திய ஆட்சியின் பலம் ஒன்றுதான் நாட்டைக் காப்பாற்றவல்லது என்று கருதுகின்றனர், முன்ஷி போன்ற அரசியல்வாதிகள். ஆனால் அப்படிப்பட்ட பலம் பல மாகாணங்களின் ஜனநாயக உரிமைகளைப் பலியிட்டு, அதன் மீது அமைக்கப்படும் சமாதி என்பதை அவர்கள் அறியாமற்போனதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது.

பல சிற்றரசுகளின் மணிமுடிகளை இறக்கியது பற்றி மத்திய ஆட்சியாளர் பெருமை கொள்ளலாம். அதுபற்றி யாரும் குறை கூற முன்வர

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஆங்கில நூல்களில் இந்திய நிகழ்ச்சிகள்

பாப்பையா சூழ்ச்சியும் வெளியாகிறது

சென்னைப் பேராசிரியர் சேகரித்துள்ள தகவல்

சென்னை, மே. 11—

ஆங்கில காவியங்களிலும், நாவல்களிலும் இந்தியர்களைப் பற்றிய சரித்திர புராண விவரங்கள் காணப்படுவதை யெல்லாம் 35-ஆண்டுகளாக ஆராய்ந்து, தலைச்சேரி பிரன்னன் காலேஜ் மாஜி பிரின்ஸ்பால் தோழர் பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி தகவல் சேகரித்திருக்கிறார்.

சென்[illegible]ற்றாண்டில் எழுதப்[illegible]களில் இங்கிலாந்திற்கும், இந்தியாவுக்குமிடையேயுள்ள உறவு நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

இந்தியர் வாழ்க்கையை மிகவும் திறம்பட விஸ்தரித்து எழுதியுள்ள ஆங்கில நாவலாசிரியர்களில் முக்கியமாக மெடோஸ் டாய்லரைத்தான் குறிப்பிடவேண்டும் என்றும், அவருடைய அழகான நாவலான 'தாரா' வில் சிவாஜி அப்ஸல்கான் சந்திப்பு மிக அழகாக வருணிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

இந்தியர்களைப் பற்றித் தன் நாவல்களில் எழுதியவர்களில் முக்கியமானவர் தாகரேயை குறிப்பிடலாம்.

இந்த தாகரேயின்மாமன், கல்கத்தாவில் சர்க்கார் காரியதரிசியாக இருந்தாராம். அவருக்கும் ராஜாராம் மோகனராயுக்கும் ஏதோ விரோதம் இருந்ததாம். இந்தத் துவேஷத்தை தாகரே தன் நாவலில் 'ரமன்லால்' என்ற பெயரில் ஒரு கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்து வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த ரமன்லாலை 'நியூ கோரஸ்' நாவலில் சந்திக்கலாம்.

ராஜாராம் மோகனராய்க்கு இங்கிலாந்தில் அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டபொழுது, தாகரே பொச்சரிப்பு தாங்காமல் துர்ப்பிரசாரத்தில் இறங்கினர்.

முதல் உலகமகா யுத்தத்தில் ஐரோப்பாவில் இருந்த இந்தியர்களை வைத்துக்கொண்டே கதாபாத்திரங்களை சிருஷ்டித்து தோழர் எச். ஜி. வெல்ஸ் நாவல்கள் எழுதியிருக்கிறார்.

1792-ல் ஜான்ஹாலந்து சென்னை கவர்னராக இருந்தபோது அவதானம் பாப்பையர் துபாஷ் ஆக இருந்தார்.

ஸர்வால்டர் ஸ்காட்டின் உறவினரான டேவிட் ஹலிபர்ட்டிஷ் (அப்பொழுது ரெவின்யூபோர்டு மெம்பர்) என்பவருக்கும், பாப்பையாவுக்கும் தகராறு ஏற்பட்டது. சென்னையிலிருந்து ஹாலிபர்ட்டனை சந்திரகிரிக்கு மாற்றும்படி செய்வதில் பாப்பையா வெற்றி பெற்றுவிட்டார். இதற்காக பாப்பையாவை ஒரு சதிக்குற்றத்தில் ஈடுபடுத்தி, அவருக்குத் தண்டனை கிடைக்கும்படி ஹாலிபாட்டன் செய்துவிட்டார். பாப்பையாவுக்கு பின்னர் இத்தண்டனை ரத்து செய்யப்பட்டது. பாப்பையா விசாரிக்கப்பட்டது குறித்து ஹாலிபாட்டன் ஒரு சிறு புத்தகம் வெளியிட்டிருந்தார்.

1827-ல் ஸர்வால்டர் ஸ்காட் எழுதிய சாஜன்ஸ் டாட்டர் (சர்ஜனின் குமாரி) என்கிற நாவலில் அவதானம் பாப்பையாவைப்பற்றியும் இந்த வழக்கு விசாரணைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

இம்மாதிரி இந்திய சம்பவங்கள், ஆங்கில காவியங்கள், நாவல்களில் ஏராளமாக இருக்கின்றன. இதைப் பற்றி ஆராய்ந்தால், இந்தியா பிரிட்டனுக்குமுள்ள உறவு, இந்தியாவை பிரிட்டன் எவ்வளவு தூரம் அறிந்து கொண்டது முதலிய பல விஷயங்கள் வெளியாகும் என்று அவர் கூறினர்.

ஸிட்னி மாநாடு

ஆரம்ப அலுவல்கள்

ஸிட்னி, மே 11—

இங்கனம் ஆரம்பமாகவிருக்கும் ஸிட்னி காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளும் துதகோஷ்டிகள் வர ஆரம்பித்துவிட்டன. பூர்வாங்க வேலை மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

பிரிட்டிஷ் தூதகோஷ்டித்தலைவர் லார்ட் மார்ட்டுஸ்ட், மலேயாவின் எதிர்கால விஷயமாக ஆஸ்திரேலிய சர்க்காரின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இந்தோ-சீனு பிரச்னை பற்றி இந்தியா

லண்டன், மே 11—

இந்தோ-சீன பிரச்சினை தீர சாவ்டே-ஹோசிமின் இருவரும் சமரசமாகப் போக வழியிருக்கிறது என்று, இந்தியா வெளியிட்ட அபிப்பிராயத்தைப் புதுடில்லி சர்க்கார் விளக்கிக் கூற வேண்டும் என்று, மாஞ்செஸ்டர்கார்டியன் பத்திரிகை கோரியிருக்கிறது.

மெக்ஸிகோ, மே 11—

சில அபூர்வ மூலிகைகளை மனிதனுக்கு [illegible] ஒரு அமெரிக்க டாக்டர் அப்ராம் [illegible]லீன் [illegible]ஸம் தேடிவருகிறார்.

பஞ்சத்தை ஓட்ட படை வீரர் ஆற்றும் பணி

—(0)—

செஞ்சீனாவில் உணவு உற்பத்தி தீவிரமாகிறது

ஹாங்காங், மே. 11—

சீனக் கம்யூனிஸ்டுகள், தங்கள் பெரும் ராணுவத்தைக் கலைக்கும் அறிகுறிகள் எதையும் காணவில்லை. இந்த ராணுவச் செலவுக்காக மட்டும் ஏராளச் செலவாகிறதென்றும், 60 லக்ஷம் பேர்கள் சீன ராணுவத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இத்துருப்புகளைக் கொண்டே சீனக் கம்யூனிஸ்டுகள் உணவு உற்பத்தி, நீர்பாசன திட்டங்கள் முதலியவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

மஞ்சூரியாவில் சீனக் கம்யூனிஸ்டு துருப்புகள், உணவு உற்பத்தி வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. சீனப் பஞ்சத்தைச் சமாளிக்கவே துருப்புகள் இவ்வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பஞ்சாப்பொதுத்தேர்தல்

ராவல்பிண்டி, மே 11—

பாகிஸ்தான் பஞ்சாபில் இவ்வருஷம் டிஸம்பருக்குள் பொதுத்தேர்தல் நடைபெறுமென விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டனவென்றும், வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டுவிட்டனவென்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தனக்குச் சட்டசபை மெஜாரிட்டி கிடைக்கும் என்று தெரிந்திருந்தாலும், தேர்தலில் பலத்த எதிர்ப்பு இருக்கும் என்பதை உணர்ந்து இன்னும் சிறிது காலம் தேர்தலை ஒத்திப்போடவேண்டும் என்று விரும்புகிறது.

மாலை மணி

சென்னை 12—5—50 வெள்ளிக்கிழமை

எங்கு மூளும்?

மியூனிச் ஒப்பந்தத்தைக் குப்பைக் காகிதமாகக் கருதி அடால்ப் இட்லர் கிழித்தெறிந்த போதுகூட, உலகப்போர் மூளாது என்றுதான் பிரிட்டிஷ் பிரதமர் நெவில் சாம்பர்லின் நினைத்தார். ஆனால், அடுத்தநாள் அல்சாஸ்-லோரைன் பள்ளத்தாக்கில், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான பிரதேசத்தில், ஜெர்மன் படை புகுந்துவிட்டது. அது பத்தாண்டுகளுக்கு முன்பு; அன்று ரஷியா ஒன்றுதான் பொதுவுடமை நாடாக இருந்தது. இன்றுள்ள நிலை வேறு.

உலகப்போர் மூன்றாவது முறையாக ஆரம்பிக்கப் போகிறதென்பதில் சாதாரண அரசியல் அறிவு பெற்றவர்களுக்குக்கூட சந்தேகமில்லை. எப்படி மூளப்போகிறது? எங்கே மூளப்போகிறது?

இந்தோ-சீனா, அங்கே இரண்டு பேர் ஆட்சி நடத்துகின்றனர். சுதந்திர நாடாக்கிப் பொதுவுடமைக் கொள்கையைப் பரப்பவேண்டுமென்று கருதும் தோழர் ஹோ-சி-மின் ஒருபுறம், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கையாளாக, இந்தோ-சீனாவை மேல் நாடுகளுடன் தொடர்புள்ளதாகச் செய்து, பொதுவுடமைக்கொள்கையையே நசித்துவிடவேண்டுமென்று கருதும் பாவ்டாய் மற்றொருபுறம். கொரில்லாப் படை தளபதியாக ஆரம்பித்த தோழர் ஹோ-சி-மின், இன்று இந்தோ-சீனாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றி இருக்கிறார். செஞ்சீனா, ரஷ்யா உள்ளிட்ட எல்லாக் கம்யூனிஸ்டு நாடுகளும் ஹோ-சி-மின் சர்க்காருக்கு அங்கீகாரம் தந்துள்ளன. அதே நேரத்தில் பாவ்டாய் பொம்மை சர்க்காருக்கு அமெரிக்காவும், பிரிட்டனும், அமெரிக்காவின் ஆதரவை நாடியுள்ள மற்ற மேல் நாடுகளும் தாங்கிப்பிடித்துக்கொண்டிருக்கின்றன. பாவ்டாய் சர்க்காரை ஆதரிப்பதால் நாளொன்றுக்குப் பத்து லட்சம் டாலர் செலவாகிறதென்றும், அமெரிக்கா உடனே ஆதரவு தரா விட்டால் இந்தோ-சீனாவைக் கைவிட வேண்டி வருமென்றும் பிரெஞ்சு சர்க்கார் அறிவித்துவிட்டது. உள்நாட்டுக்கொள்கை எத்தகையதாக இருந்தாலும், அந்நியர் ஆதிக்கம் நாட்டில் இருக்கக்கூடாதென்று இந்தோ-சீனா மக்கள் கருதுகிறார்கள்; அவ்வாறு அந்நிய சர்க்காரின் பொம்மையாக ஆட்சி நடத்தும் பாவ்டாய் மன்னனுக்கு அடிபணிய அவர்கள் அறவே மறுக்கிறார்கள். இந்தோ-சீனாவை இழந்துவிடுவோமே, என்ற கிலி அமெரிக்காவுக்கு அதிகம் பிடித்திருப்பதால், அடுத்து இந்தியாவிலும் கம்யூனிசம் புகுந்துவிடுமோ என்று அந்நாட்டு அரசியல் நிபுணர்கள் எண்ணுவதால், இந்தோ-சீனாவை எப்படியாவது கம்யூனிஸ்டுகள் கையில் விழாமல் தடுக்க வேண்டும், வழிகள் வகுக்க முயன்று விட்டார்கள் டாலர் முதலாளிகள்! வகுக்கப்பட்ட வழிகளின் முடிவு போராகத்தான் இருக்குமென்று அரசியலை அலசி அலசிப்பார்த்த நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சீனாவில் உள்நாட்டுப்போர் அனேகமாக முடிந்துவிட்டதென்றே கூறலாம். ஹைனன் தீவில், சியாங் படைகள் கம்யூனிஸ்டுகளிடம் சரணாகதியடைந்ததுபோல், பார்மோசா தீவிலும் சரணடைந்துவிடுமென்றுதான் நம்புகிறோம். சியாங்கேஷேக்கை முறியடிக்கத் திரட்டிய சீனப்படைகள், அதற்காகச் சேகரிக்கப்பட்ட போர்த்தளவாடங்கள் அவ்வளவும் உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சீனப்படைகளுக்கு உணவு வேண்டும்; அது சீனாவில் இப்பொழுது கிடைப்பது கடினம், பஞ்சநிலை ஏற்பட்டுள்ள காரணத்தால். அதனால் மா-சே-துங் படைகள் உத்தரவை எதிர்பார்த்து, இந்தோ-சீனாவின் எல்லையில் நிற்கின்றன

உள்நாட்டுப் போராகிய ஹோ-சி-மின், பாவ்டாய் தகராறில் பிரான்ஸ் தலையிட்டிருப்பதுடன், அமெரிக்கா இன்றோ, நாளையோ தன்னுடைய டாலரின் சக்தியை உபயோகிக்க இருக்கிறது. அது ஏற்பட்டால் கம்யூனிஸ்டுகளுக்கு மா-சே-துங்கும், ஸ்டாலினும் பகிரங்கமாக உதவி செய்யமுற்படுவார்கள். விளைவுவேறென்றுமிருக்காது, மூன்றாவது உலகப் போர் மூண்டுவிடும்!

தென்கிழக்கு ஆசியா நாடுகள், ஆண்டு பலவாக அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்ததால், தொழில் வளர்ச்சியிலும் விவசாயத்துறையிலும் முன்னேறவில்லை. அதன் காரணமாக நாட்டில் வாழ்க்கை நிலை தாழ்ந்திருக்கிறது. ஒரு சிலர் ஏகாதிபத்யவாதிகளின் கைக்கூலிகளாக இருந்து, முதலாளிகளாகிப் பணத்தைக் குவித்து விட்டிருக்கிறார்கள்—பெருவாரியான மக்கள், உழைத்துஉருக்குலைந்துபோன மக்கள்—ஏழ்மையில் வாடும் மக்கள், நாட்டில் புரட்சிகரமான மாறுதல்கள் தோன்ற வேண்டும், அப்படித்தோன்றினால்தான் பசியடங்க வழி பிறக்குமென்று கருதுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல; பொதுவுடமைக் கொள்கைகள் பரவக்கூடாதென்று கருதும் மேல்நாட்டினரும், பசித்த வயிறுதான் பொதுவுடமை விதை முளைத்து எழப்பண்படைந்த நிலம் என்பதை உணர்ந்து விட்டார்கள். அதனால்தான், ரொட்டித்துண்டுகள் கொடுத்து பசியைஅடக்கி விட்டால் புரட்சி பலம் பெறாது என்ற நோக்கத்தோடு டாலர் கடன் உதவிதர முற்பட்டிருக்கிறார்கள். சீனாவில் அவர்களுக்குத் தோல்வி தேடிக்கொடுத்த தோழர், சியாங்கேஷேக் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார்; ஆகையால் இந்தோ—சீனாவில் வீண் பரீட்சை செய்யவேண்டாம்! விளைவு தோல்வியைத் தவிர வேறாக இருக்காது.

உலகின் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பு, பொதுவுடமைக்கொள்கைக்காரர் கையில் மக்கட் தொகையிலும் அவர்கள் பாதிக்குமேல் இருக்கிறார்கள். கொள்கைக்காகப் போராடுபவர்கள் ஆகையால், விரைவில் சலிப்படைய மாட்டார்கள். உயிரைக் கொடுத்தாவது கொள்கையை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களாகவே இருப்பதால், ஏகாதிபத்யம் போர் ஆரம்பிக்குமானால், அது சென்ற உலகப்போரைப் போன்று, மேலும் பல கம்யூனிஸ்டு நாடுகளைத் தோற்றுவிக்குமென்பதில் ஐயமில்லை.

ரால்ப்பஞ்ஜின் ஆத்மீக உபதேசம்

நியூயார்க், மே 11—

"ஒரு நாடு பலம் பெற்று விளங்க ராணுவ பலம் மட்டும் போதாது, ஆத்மீக பலம் அத்யாவசியம்" என்று ஐ. நா. தர்மகர்த்த இலாகா டைரக்டர் டாக்டர் ரால்ப்பஞ்ஜ் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

மனிதர் உறவு, சௌஜன்யம் இவை சீர்பட்டால் தான் சர்வதேச தகராறுகள் தீர்க்கப்பட முடியும். அத்தகைய நிலைமை ஏற்படும்வரை ஐ. நா. நிலைமை மிகவும் மோசமாகி விடாதபடி பார்த்துக்கொள்ளும்.

எப்படி மக்களை யுத்த வெறி கொள்ளும்படி செய்யமுடியுமோ, அதேபோல் அமைதியை அவர்கள் நாடும்படி செய்யலாம்.

பயம், சந்தேகம், தவறான எண்ணம் இவை ஒருவருக்கொருவர் மனதில் இருந்துகொண்டே இருக்குமானால், அமைதி ஒருக்காலும் நிலவ முடியாது.

யுத்தம் தவிர்க்க எங்களால் ஆனதை இவ்வளவுதூரம் செய்திருக்கிறோம் என்பதை, எந்த நாடும் இன்று தைரியமாக சொல்லிக்கொள்ள முன்வரும்நிலைமையில் இல்லை.

நம்மைக்கண்டேதான் நாம் பயப்படவேண்டுமே ஒழிய, நவீன ஆயுதங்கள் எதையும் கண்டு அல்ல. மனிதன் சுபாவமாகவே கெட்டவனல்ல. கெட்ட தன்மைக்கு மனப்பான்மைதான் காரணம்.

நல்லதைச் செய்யக்கூடிய மனோபாவத்தை மனிதர்கள் பெறச் செய்யமுடியும். —ரூனோப்

மலேயாவில் பிரிட்டிஷ் துருப்புகள் கைவரிசை

சிங்கப்பூர், மே. 11—

கோலலம்பூர் பிரதேசத்தில் நீண்டகாலமாக, மிகவும் தொல்லை கொடுத்[illegible] என்ற கம்யூ[illegible] பிரிட்டிஷ் துருப்புகள் சிறைபிடித்திருக்கிறது. இதன் தலைவர் லாயூகோன்னும், இன்னும் தலைமறைவாகவே இருந்துவருகிறார். இதுவரை இதில் 8 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

ஸயாமுக்கு ராணுவ மோட்டார்கள்

லண்டன், மே 11—

யுத்தத்தின் போது உபயோகிக்கப்பட்ட 250 ராணுவ மோட்டார்கள், இப்பொழுது ஸயாமுக்கு விற்கப்பட்டுவருவதாக டெய்லி மெயில் தகவல் கூறுகிறது.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

கட்டிட நிதிக்கு

உங்கள் காணிக்கை எங்கே?

ஆர்வ மிகுதியை அன்பளிப்பு மிகுதியால் காட்டுங்கள்!

உடனடித் தேவை 10,000!

ஆக்கவேலைக்கு ஆதரவு தாரீர்!

கடமையைச் செய்வீர்! களிப்பு அடைவீர்!!

எகிப்திய பருத்தி கமிட்டிக் கூட்டம்

லண்டன், மே 11—

பாரிஸில் கூடிய எகிப்திய கட்டுப் பருத்திக் கமிட்டிக் கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் செய்யப்பட்டதென்றும், இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதாகவும், கெய்ரோவில் நடைபெறவிருக்கும் அடுத்த கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ளவேண்டுமென்று அழைக்கப்பட்டதாகவும், எகிப்திய ராயல் விவசாய சங்க டைரெக்டர் ஜெனரல் அபாஸா பாஷா குரோப் நிருபரிடம் கூறினார்.

இந்த அகிலக் கூட்டம், அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நடை[illegible] தக்கொ[illegible] பட்டுவருகிறது.

எகிப்து வாடிக்கைக்காரர்களில் இம்மாநாட்டில் கலந்துகொள்வதில் இந்தியா ஒன்றுதான் ஐரோப்பியரல்லாத நாடாகும்.

போலீஸ் அவுட் போஸ்ட் தாக்கப்பட்டது.

அஸ்மாரா. மே. 11

அஸ்மாராவுக்கு 7 மைல் தூரத்திலுள்ள ஒரு போலீஸ் அவுட்போஸ்டை சுமார் 60 பேர்கள் கொண்ட கலகக் கோஷ்டியினர் தாக்கினர். ஒரு மணிநேரம் சண்டை நடைபெற்றபின், கலகக் காரர்கள் வாபஸாகிவிட்டனர். 5 பேர் மாண்டனர் பலருக்குக் காயம்

க்ஷயத்தைத்தடுக்க புது மருந்து

நியூயார்க், மே 11—

க்ஷயரோகத்தைத் தடுக்க வயோமெஸின் என்கிற புது மருந்து ஒன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை ஆராய்ச்சிக்கூடத்திலேயே இருந்த இம்மருந்து, இப்பொழுது மனிதர்களுக்கும் உபயோகிக்கப்படுகிறது. க்ஷயக்கிருமிகளை இது நொடியில் கொன்றுவிடுகிறதாம்.

பாகிஸ்தானில் க்ஷயநோய் ஒழிப்புத் திட்டம்

குவெட்டா, மே 11—

ஐ. நா. சர்வதேச க்ஷய ஒழிப்பு ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் வின்ஜெர் ஆண்டர்ஸன், பாகிஸ்தானில் க்ஷய ஒழிப்பு விஷயமாக ஆலோசனை கூற வந்து சேர்ந்திருக்கிறார்,

பங்குபோட்டுக் கொள்ளலாமே!

பிரிட்டன் யு. எஸ். க்கு ஜப்பான் யோசனை!

ஒஸாகா, மே 11—

உலக ஜவுளி மார்க்கெட்டுகளை பிரிட்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான் இம்மூன்று நாட்டிற்குமிடையே பங்குபோட்டுக்கொண்டு வீண் போட்டியைத் தவிர்க்கலாம் என்ற யோசனையை ஜப்பான் இங்கு வந்துள்ள பிரிட்டிஷ் அமெரிக்க ஜவுளி தூதுகோஷ்டியினருக்குத் தெரிவிக்கலாம் என்று க்யோடோ நிருபர் கூறுகிறார்.

சீனா, தென்கிழக்கு ஆசியாவுக்கு [illegible] செய்[illegible]கள், லங்காஷயர் அமெரிக்க விலையுயர்ந்த ஜவுளிகளை இதர மேனாட்டு மார்க்கெட்டுகளில் போட்டியின்றி விற்றுக்கொள்ளலாமே என்பதை ஜப்பானிய ஜவுளி வியாபாரிகள் விளக்குவார் என்று தெரிகிறது.

ஆனால், ஜப்பான் இப்போதுள்ள மார்க்கெட்டுகளை விட்டுக் கொடுக்காது என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் ஓட்டல்

கம்யூனிஸ்டு சர்க்காருக்கு விற்கப்பட்டது.

ஹாங்காங், மே. 11—

கிழக்கோடியிலேயே மிகவும் புராதனமாக ஏற்படுத்தப்பட்ட பீகிங் பிரிட்டிஷ் ஹோட்டல், சீனக்கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு விற்கப்பட்டு விட்டது. இதை நடத்தி வந்த கம்பெனி பெயர் ஹாங்காங் ஷாங்கே ஓட்டல் லிமிடெட், இதன் தலைமை ஸ்தாபனம் ஹாங்காங்கில் இருக்கிறது. இந்த ஓட்டல் எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டதென்பது தெரியவில்லை.

ரங்கூனுக்கு கப்பல் தபால்

எஸ். எஸ். வேலா என்ற கப்பல் 1950 மே 13-ந் தேதி சென்னையிலிருந்து ரங்கூனுக்குப் புறப்படுகிறது. சென்னை நகரத் தபால் பிரிவுகளில் மே 11-ந்தேதியும், சென்னை ஜி. பி. ஓ. வில் மே 12, பிற்பகல் 4-30 மணி வரையும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் அனுப்பப் படும்.

வெட்டுக்கிளிப் படையெடுப்பை சமாளிக்க முயற்சிகள்

—————(0)—————

மத்திய சர்க்கார் முயற்சியில் மாநாடு நடைபெறும்

வெட்டுக்கிளியின் அழிக்கும் சக்தி எவ்வளவென்று உங்களுக்குத் தெரியுமா? 1926-31-ல் ஏற்பட்ட வெட்டுக்கிளித் தாக்குதலின் போது, இந்தியாவில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் அழிந்து போயின. வெட்டுக்கிளித் தொல்லை, இந்தியாவிலிருந்து மேற்காப்பிரிக்கா வரை வியாபித்திருக்கும் பிரதேசத்தில்தான் சாதாரணமாக ஏற்படுவதுண்டு. ஆனால் இந்தப் பிரதேசத்தில் கடுமையான தாக்குதல் ஏற்படும்போது ரஷ்யாவின் தென் பாகமும், ஐரோப்பாவின் தென் பாகமுங்கூடப் பாதிக்கப்படுவதுண்டு.

இந்தக் கோடையில் இந்தியாவில் வெட்டுக்கிளித் தாக்குதல் ஏற்படக்கூடுமென்று அஞ்சப்படுகிறது. தாக்குதல் ஏற்பட்டால் நிலைமையைச் சமாளிப்பதற்கு வேண்டிய எதிர் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்காக சமீபத்தில் ஜோத்பூரில் ஒரு மாநாடு நடைபெற்றது. ராஜஸ்தானி, பெபிஸூ, மத்தியபாரத், மத்தியப் பிரதேஷ், பம்பாய், சௌராஷ்டிரம் முதலிய ராஜ்ய சர்க்காரின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில், மத்திய சர்க்காரின் மேற்பார்வையில் ஒருமுகமான நடவடிக்கைகள் எடுப்பது பற்றிச் சில முடிவுகள் செய்யப்பட்டன.

வெட்டுக்கிளிகள், சாதாரண தத்துக்கிளி இவற்றைச் சேர்ந்தவையேயாகும். ஆனால் தத்துக்கிளிகளைப் போலல்லாமல் இவை எப்பொழுதும் கூட்டங்கூட்டமாகவே காணப்படும். இவை வெகு தூரம்-மேற்கே அஸ்ஸாமிலிருந்து, தெற்கே சென்னை [illegible] [illegible]டியவை. [illegible] [illegible]ரோவிதமான வெட்டுக்கிளிகள் உள்ளன.

ஆனால் இந்தியாவில், (1) பாலைவன வெட்டுக்கிளி, (2) வெளியேறிச் செல்லும் வெட்டுக்கிளி, (3) பம்பாய் வெட்டுக்கிளி என மூவகை வெட்டுக்கிளிகளே உள்ளன. இவை தனித்தனியான அங்க அடையாளங்கள் கொண்டவை. இவற்றை எளிதில் இனங் கண்டுகொள்ளமுடியும். கடந்த 90 ஆண்டுகளில் இந்தியாவில் 8 தடவை வெட்டுக்கிளித் தாக்குதல்கள் ஏற்பட்டுள்ளன; கடைசித் தாக்குதல் 1940-46-ல் ஏற்பட்டது.

இந்தியாவில், ஜோத்பூர், பிகானிர், ஜெய்பூர், பாலைவனப் பிரதேசங்களும், ராஜஸ்தானில் சில பகுதிகளும், இந்தப் பிரதேசத்தை ஒட்டியிருப்போலுள்ள பம்பாய், சௌராஷ்டிரம் ஆகிய ராஜ்யங்களின் பாலைவனப் பிரதேசங்களும், பஞ்சாபும், பெப்ஸூவும், வெட்டுக்கிளித் தாக்குதல்கள் ஏற்படக்கூடிய நிரந்தரப் பிரதேசங்களாகும். இந்தியாவுக்கு வெளியில் சில பகுதிகள், - காய்ப்பூர்மிர்ஸ், பஹவல்பூர், பலுசிஸ்தானின் மேற்பகுதியில், ஈரான். அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா, வடக்கு ஆப்பிரிக்கா ஆகியவை பாலைவன வெட்டுக்கிளியின் நிரந்தர உற்பத்திப் பிரதேசங்களாம்.

வெட்டுக்கிளிகளை அவை தத்துக்கிளிப் பருவத்தில் இருக்கும்போது அழித்துவிடுவது வெகு சுலபம். பின்வரும் முறைகளில் ஏதாவதொன்றையோ, பலவற்றையோ கையாண்டு இதைச் செய்துவிட முடியும்.

அரண் அமைத்தல்:— தத்துக்கிளிக் கூட்டம் முன்னேறிவரும் பாதையில் நீண்ட குழிகள் வெட்டி வைக்கப்படுகின்றன. குழியின் ஆழமும் அகலமும், தத்துக்கிளிகளின் வளர்ச்சியைப் பொறுத்து அதிகமாகவோ குறைவாகவோ இருக்க வேண்டும். இளம்பருவத்திலுள்ள தத்துக்கிளிகளுக்கு 18 அங்குல ஆழமும் 12 அங்குல அகலமும் உள்ள குழிகள் 240. அமைக்கலாம் போதும். குழியின் இரண்டு எல்லைகளிலும், தத்துக்கிளி வரும் திசையை நோக்கி, அகன்றுபோல் தாரத் தகடுகளை வைத்து மறைவு அமைக்கவேண்டும்.

சுட்டுப் பொசுக்குதல்:—புதர்களில் மண்டிக்கிடக்கும் தத்துக்கிளிகள் தீயிட்டுப் பொசுக்கப்படுகின்றன. தீயிடுவதற்கு முன்னால் அந்தப் புதரைச் சுற்றிலும் தகரத் தகடுகள் வைத்து மறைக்கப்படுகிறது.

ஆசைகாட்டி அழிப்பது:—புதர்களைச் சுற்றிலும், அவை முன்னேறிச் செல்லும் வழியிலும் நாசசத்துள்ள விஷ மருந்துகள் தூவப்படும்.

மருந்து தூவுதல்:—புதர்களில் இருக்கும் தத்துக்கிளிகள் மீது பென்ஸின் ஹெக்ஸ க்ளோரைட் போன்ற பூச்சிகொல்லி மருந்துகள், கைக்கருவிகள் கொண்டோ, யந்திரத்தால் இயங்கும் கருவிகள் கொண்டோ தூவப்படுகின்றன.

மனிதர்கள் நடத்தும் போரில் உள்ளதுபோலவே, வெட்டுக்கிளியை எதிர்த்து நடத்தப்படும் போராட்டத்திலும் உளவு தெரிந்து உடனுக்குடன் அறிவிப்பது மிக மிக முக்கியமான வேலையாகும். படையெடுத்துவரும் கூட்டங்களின் அளவு, வெட்டுக்கிளியின் நிறம், பறந்து செல்லும் திசை, விளைவித்துள்ள சேத[illegible] [illegible] [illegible]கள் பற்றி அவ்வப்போதைக்கப்போது சரியான தகவல்கள் அறிவிக்கப்பட வேண்டும். தக்க சமயத்தில் எதிர் நடவடிக்கைகள் எடுப்பது இதன் மூலம் சாத்தியமாகிறது.

இந்தோனேஷியாவுக்கு தந்திகள்

சென்னை, மே 11—

இந்தோனேஷியாவிலுள்ள பின்வரும் இடங்களுக்கு, மறு அறிவிப்பு வரும்வரை, எந்த விதமான தந்திகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்று, இந்தோனேஷிய சர்க்கார் தெரிவித்திருப்பதாக வெளிநாட்டு செய்தி போக்குவரத்து ஸ்தாபனம் அறிவிக்கிறது. அந்த இடங்களாவன: அம்பாய்னா, டோபோ, கெய்ஸர், லைரட், நாம்லியா, நீரமந்தா, க்ரோபி, ஸாரோமா, ஸப்லா, தோபா ஐலிஸ், [illegible], [illegible]ளல், லஹாதி, [illegible]ரேவி.

மற்றொரு புதூக அணுகுண்டு!

வாஷிங்டன், மே 11—

அணுகுண்டைவிட ஆயிரம் மடங்கு ஆபத்தை விளைவிக்கும் என்று சொல்லப்பட்டுவந்த ஹைட்ரஜன் குண்டு பற்றி, இன்னும் நிச்சயமாக எதுவும் தெரியாவிட்டாலும், புதூக அணுகுண்டு ஒன்று அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு வருகிறதென்பது அணுசக்தி கமிஷனின் ஆக்டிங் சேர்மன் ஸம்னர் பைக் மூலமாக கூறியிருப்பதிலிருந்து விளங்க வேண்டியிருக்கிறது.

இவர் குறிப்பாக எதையும் சொல்லாமல், பொதுப்படையாக இரா அணுகுண்டு ரகங்களும் உற்பத்திச் செய்யப்படுகின்றன என்று கூறியிருக்கிறார். குறுகிய தூரத்திலுள்ள இலக்குக்கான குண்டு, நீண்ட தூரம் இலக்குக்கான குண்டு என்று இரண்டு ரகங்கள் தயாரிக்கப்படலாம் என்று நிபுணர்கள் நினைக்கிறார்கள்.

அநேகமாக புதூக அணுகுண்டு நீண்ட தூர இலக்குகளுக்கான குண்டாகவே இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (குளோப்)

யோகசாஸ்திரப் பயிற்சி பெற்ற பிரெஞ்சு பெண்

பாரிஸ், மே 10—

யோகசாஸ்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரு பிரெஞ்சு யுவதி விடிபாஸ்டின் தன் யோக சக்தி மூலம் முன்னதாக அறிவித்தபடியே அவர் காதலன் ராணுவ கோர்ட்டில் விசாரிக்கப்பட்ட வழக்கில் விடுதலை பெற்றான்.

அவன் விடுதலை அடைந்தது தனக்கு பெரு மகிழ்ச்சியை அளிக்கிறதென்றும் ஆனால் தான் இனி காதலைக் கைவிட்டுவிட்டதாகவும் இனி எளியவளாகவே இருக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

[illegible]ரிய அரசி துறவறம்

ரோம், மே. 9—

ஆஸ்திரியாவின் மாஜி அரசி விட்டாரோமுக்கு புனித ஆண்டு யாத்திரைக்காக வந்திருக்கிறார்.

இவர் கன்னிமாடத்திலேயே சந்நி தறவறத்தை மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறார்.

இவர் அதிக சாமான்கள் எதையும் உடன் கொண்டுவராமல், ரயிலில் மூன்றாம் வகுப்பிலேயே பிரயாணம் செய்தாராம்.

பிரிட்டிஷ் ஜெட்விமானம் பற்றி யு. எஸ்.

வாஷிங்டன், மே 11—

பிரிட்டிஷ் ஜெட் விமானங்கள் யு. எஸ். விமான சர்வீஸ்களிலும் அனுப்புப்படி செய்வதற்கு பிரிட்டனுக்கு ஒரு நிபுணரை யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் அனுப்பியிருக்கின்றனர்.

அமெரிக்காவின் விமான சர்வீஸில் ஜெட் விமானம் எதுவும் இல்லாததால், சில ஜெட்விமானங்களை வாங்க அமெரிக்கா உத்தேசித்திருக்கிறதாகத் தெரிகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

14 - 5 - 50

(வேலூர் வேலப்பாடி):—என். வி. நடராசன்.

புதுவை —சி. பி. சிற்றரசு.

தூத்துக்குடி:—டி. கே. சீனிவாசன், கே. வி. கே. சாமி, எம். இரத்தினம்.

15 - 5 - 50

சோழநகர்:—பி. எஸ். இளங்கோ, ம. சேரன், கலைச்செல்வி, சவித்திரி.

20 5 50

சனி மாலை 6 மணிக்கு

தி. மு. கழக கட்டிட நிதிக்காக

சென்னை முன்னேற்ற நாடகக் கழகத்தார்

வழக்கு வாபஸ்

கல்சுமந்த கசடர்

அகல்யா (வ. ரா.)

ஆகிய மூன்று நாடகங்களை நடத்துவர்

இடம்:- வி. பி. ஹால் சென்னை-3

கட்டணம்:- ரூ. 5, 3, 2, 1.

கே. கோவிந்தசாமி, டி. எம். பார்த்தசாரதி. அமைப்பாளர்கள்

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:—

"மாலைமணி" அலுவலகம் சென்னை—1

குறிப்பு:—எதிர்பாராத சம்பவங்களால் சௌந்தரிய ஹாலில் நடத்தப்படவேண்டிய நாடகம், வி. பி. ஹாலில் (விக்டோரியா பப்ளிக் ஹால்) நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பிரான்ஸில் காலனிகளுக்காக புதுமந்திரி

பாரிஸ், மே. 11—

பிரிட்டனின் காமன்வெல்த் உறவு மந்திரி ஒருவர் இருப்பது போல் பிரான்ஸுக்கும், வியட்நாம் கம்போடியா லாவஸ் இவைகளுக்கும் தொடர்பு உள்ள இலாகாவுக்கு ஒரு மந்திரியை நியமித்த பிரெஞ்சுசர்க்கார் உத்தேசித்திருக்கிறதென்பவை. பிரெஞ்சு அஸெம்பிளி மந்திரி ஷூமன் இன்று ராஜிநாமா செய்திருக்கிறார். —குளோப்

தூதுவர் ராதாகிருஷ்ணன் லண்டன் செல்வார்

ரஷ்யாவில் இந்தியஸ்தானீகரான சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் இவ்வாரம் மாஸ்கோவிலிருந்து இங்கு வந்து சேருவார். அகஸ்போர்ட்சென்றபின் யூனெஸ்கோ கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் பாரிஸ் செல்கிறார். —குளோப்

பருத்த உடல் இளைக்க புது வழி

உடல் பருமனைக் குறைக்க அதிக சத்துள்ள பெருங்கூட்டு உணவில் உண்ண வேண்டும் என்று, லண்டன் பல் ஆஸ்பத்திரி உதவி டாக்டர் மாண் கூறுகிறார்.

உடல் பருத்தவர்கள் பசியை குறைந்த அளவில் ஆற்றக்கூடிய சத்துள்ள உணவை முதலில் கண்டுபிடிப்பதுடன் 'சர்க்கரை உருளைக்கிழங்கு, மீன் கொழுப்பு பதார்த்தங்கள் முதலியவைகளை ஒதுக்கவேண்டும்' என்றும் அவர் கூறுகிறார்.

வேளா வேளைக்குச் சாப்பிடும் உணவுதவிர வேறு எதையும் உட்கொள்ளக்கூடாது என்றும், காய்கறிவகைகள் நிறைய சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

இனி நடப்பவை

சோழநகர்:—தி. மு. கழக சார்பில் தோழர் தமிழரசன் தலைமையில், 15-5-50 மாலை ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் பி. எஸ். இளங்கோ, ம. சேரன், தோழியர்கள் கலைச்செல்வி சாவித்திரி, முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை:—14-5-50 காலை 10 மணிக்கு நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், "திராவிடர் பாராளுமன்றம்" கூடும். அதுபோது "ஜாதி ஒழிப்பு மசோதா" கொண்டுவரப்படும். தோழர்கள் அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

சென்னை, திருவல்லிக்கேணி:—தி.மு. கழகக் கிளையின் செயற்குழுக்கூட்டம், சாலுபாக் இரண்டாவது தெரு கழகக் கட்டிடத்தில் 13—5—50 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும்.

* * *

தூத்துக்குடி:— பாரதிதாசன் தி. மு. கழகப் படிப்பகத்தின் சார்பில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பிறந்த நாள் விழா நிலையத்தில் 14-5-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர் சு. அருணாசலம் தலைமை வகிப்பார். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. வி. கே. சாமி, எம். இரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை:- மாகாணத் தொழிற்சங்க காங்கிரஸ் கூட்டம் 14-5-50 அன்றுமா. தொ. ச. கா. ஆபீஸில், தோழர் சக்கரைசெட்டியார் தலைமையில் மாலை 4-30-மணிக்கு நடைபெறும்.

* * *

சென்னை, செக்ராதிரிப்பேட்டை: தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர் கூட்டம் 13—5—50 இரவு, 8-30 மணிக்கு. 84, அய்யா முதலித் தெருவில், நடைபெறும்.

★ நாட்டு நடப்பு ★

அம்பேத்கார் விழா

சேலம், ஏப். 28—

டாக்டர் ஆர். அம்பேத்கார் பிறந்த நாள் விழாவும், இந்தசட்ட சீர்திருத்த மசோதா ஆதரிப்புக் கூட்டமும், சேலம் டவுன் பிச்சி மாளிகம் ஆதித்திராவிடசீர்திருத்த முன்னேற்ற சங்கத்தாரால் நடத்தப்பட்டது. ஓர் பொதுக் கூட்டம் 24-5-50 அன்று தோழர் மருணியப்பன் டாக்டர் அம்பேத்கார் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் சே. நடராஜமூர்த்தி தலைமை தாங்கினர், தோழர்கள் என். வரதன், ரங்கசாமி, சரவணசாமி, மொட்டையாண்டி, காளியாபிள்ளை ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். தோழர் அம்பேத்காருக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் அனுப்பப்பட்டது.

திருவள்ளுவர் கழகம்

மதுரை, மே 1—

28-4-50 இரவு வடக்காடி வீதி, திருவள்ளுவர் கழக மண்டபத்தில் தமிழாசிரியர் தோழர் மீ. கந்தசாமிப் புலவர் "பண்புடைமை" என்னும் பொருள்பற்றிப் பேசினர். "ஒழுக்கமுடைமை" எனத்தனியாகவே ஓர் அதிகாரம் வள்ளுவர் வகுத்தமைபற்றியும், சங்ககாலநூல் பற்றியும் மிகவிளக்கமாகக்கூறினர். தோழர் சாம்பசிவன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

திருக்குறள் சொற்பொழிவு

ஆர்க்காடு, மே 6—

பெரியசர் மைதானத்தில் 6—5—50 மாலை மாபெரும் திருக்குறள் பொதுக்கூட்டம் நடந்தது. அதுபோது தோழர் பி. எஸ். சிவசங்கரன் தலைமைவகித்தார். தோழர்கள் இரண்யன், புலவர் ஆ. மணிஎழிலன், நடராசன் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர். தோழர்கள் இளமுருகன், இரண்டு...ன பஞ்சாயத்துத் ... அடக்குமுறை தர் ... ஆ...த்துப் பேசிய பின் ... முடிந்தது.

திருக்குறள் சொற்பொழிவு

காவேரிப்பாக்கம், மே 7—

இவ்வூர் கடைவீதியில் 7-5-50 மாலை ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதுபோது தோழர் இராதா அவர்கள் தலைமை வகித்தார். ஆர்க்காடு புலவர் ஆ. மணிஎழிலன் பேசிய பின்பு தோழர் இளங்குப்பன் அவர்கள் 2 மணி நேரம் பேசினர்.

தமிழர் மறுமலர்ச்சி மன்றம்

பொள்ளாச்சி, மே 2—

30—4—50 அன்று மாலை மன்றத்தின் சார்பில், தேர்நிலைத்திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கோ. கோபால் வழிமொழிய, ஏ.எஸ். மாரியப்பன் பின்மொழிய தோழர் எம். சதாசிவம் தலைமைவகித்தார். முகவுரையில் மறுமலர்ச்சி குறித்தும் பேசிய பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் 'இன்றைய தமிழர் நிலையும், அரசியலில் மறுமலர்ச்சியும்' என்பது பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆர். எஸ். மாரியப்பன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

பாரதிதாசன் படிப்பகம்

பூனத்துக்குடி, மே 5—

30-4-50 காலை இக்கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், பாரதிதாசன் பிறந்தநாள் 14-5-50 தேதி கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. மேற்படி கூட்டத்திற்குத் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. தோழர் மு. பால்பாண்டியன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

சொற்பயிற்சிக் கழகம்

குளூர், மே 8—

7-5-50 இரவு தோழர் எஸ். பி. இரங்கசாமி தலைமையில் 'மேதினம்' பற்றி, உறுப்பினர் பலர் பேசினர். மேதினம் கொண்டாட வேண்டிய அவசியத்தைப் பற்றி பலர் பேசிய பின், தோழர் எஸ். என். அருணாசலம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

பீடித் தொழிலாளர் மாநாடு

கோவை, ஏப். 28—

டி மாவட்டில் செயற்குழு கூட்டம் 1-5-50-ம் தேதி இரவு தோழர் ஜனாப் ஷேக் அப்துல்காதர் சாகிப் தலைமையில் நடைபெற்றது. இம்மாதம் 16-5-50ம் தேதி கோவையில் கோவை ஜில்லா பீடித் தொழிலாளர் மாநாடு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு ஒரு வரவேற்புக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

மாணவர் சங்க ஆண்டு விழா

ஊரூர், மே 7—

4 5-50 மாலை வடாற்காடு மாவட்டக் கழகக் கல்வியதிகாரி (டி. பி. இ. ஓ.) தோழர் எ. மூனிசாமி பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. அதுபோது தோழர் எம். வி. அங்கண்ணர் பி. ஏ. எல். டி. அவர்கள் "குடியரசு நாட்டில் முதியோர் கல்வி" என்ற பொருள்பற்றியும் தோழர் ஜி. எஸ். சுப்ரமணியம் அவர்கள் "பெற்றோர் ஆசிரியர் ஒத்துழைப்பு" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். "சீர்திருத்தம்" என்ற நாடகமும் நடைபெற்று தமிழ்வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

திறப்பு விழா

மதுரை, மே 8—

கீழச்சந்தைப் பேட்டை தி. மு. இளைஞர் மன்றத்திறப்பு விழா 7-5-50 மாலை தோழர் எஸ் முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. எஸ் ராஜமான் இயக்கக்கொடியினை யேற்றுவித்து, இளைஞர்களின் எழுச்சியைப் பற்றிப்பேசினர். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தற்கால அரசியல் நிலை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முடிவில் மன்றத் தலைவர் தோழர் பொ. துரைராசு அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிது முடிவுற்றது.

முத்தமிழ் வளர்ச்சிக் கழகம்

வடுகபாளையம், ஏப். 29—

28-4-50 தோழர் வி. கே. பழனிச்சாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கோவையில் நடைபெறவிருக்கும் தமிழ் வளர்ச்சி மாநாட்டிற்கு ஆதி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பூரில் தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக இந்த ஆண்டு நாடகம் நடத்தும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

தோழர் பே. சி. பொன்னுசாமி கவுண்டர் குடும்ப உதவி நிதியை விரைவில் தர முடிவு செய்யப்பட்டது.

மாணவர் பகுதியின் சார்பில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது.

மற்றும் பல தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

சினிமா தொழிலாளிகள் வேலை நிறுத்தம்

சென்னை, மே 10—

குறைந்த சம்பளம் வாங்க முடியாதென்று கூறியதால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட மூன்று தொழிலாளிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும்முறையில் சென்னை பொம்பூர் லட்சுமி டாக்கிஸ் தொழிலாளர்கள் மே மாதம் 9-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

சென்னை எம். எல். ஏ. மரணம்

வேலூர், மே. 10—

சென்னை சட்டசபை அங்கத்தினர் தோழர் வி. டி. கண்ணப்ப முதலியார் சென்ற இரவு காட்பாடியிலுள்ள தம் இல்லத்தில் மரணமடைந்தார். சில நாட்களாக அவர் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

மத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டார்கள். ஆனல், மற்ற மாகாணங்களில் மக்கள் ஆட்சி நிலவமுடியாவண்ணம் மாகாணங்களின்உரிமைகளைப் பறித்துவைத்துக்கொண்டுமத்திய ஆட்சி நடைபெறுவதென்றால் அது மமதையின் பாற்பட்ட யதேச்சாதிகார ஆட்சி என்றே சொல்லவேண்டும்.

1935-ம் ஆண்டு அரசியல் திட்டத்தின் அடிப்படையிலேயே இன்றைய அரசியலும் அமைந்துள்ளது என்று, அழகாக, தைரியமாகக் கூறுகிறார் தோழர் முன்ஷி. 1935-ம் ஆண்டு அரசியல் சட்டம் எத்தகையது என்பதை ஈண்டு நாம் விளக்கத் தேவையில்லை இன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் அன்பர்கள் அதே 1935-ஆண்டு சட்டத்தை வேம்பென வெறுத்தனர். மாகாணங்களின் உரிமையைப் பறிக்கும் சட்டம் என்று தூற்றினர். கவர்னருக்கே அதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன என்றனர். இன்னும் ஏதேதோ கூறி அந்த உதவாக்கரை அரசியலோடு ஒத்துழைக்க மாட்டோம் என்றும் கிளர்ச்சி செய்தனர்.

இங்ஙனம் எந்ததிட்டத்தை முறையை இவர்கள் வெறுத்தார்களோ. கண்டித்துப் பேசினார்களோ அதே முறையின் அடிப்படையில் இன்று, அரசியலை அமைத்துவிட்டு அதன் அவசியம் குறித்தும் பேசுகின்றனர். என்னே விந்தை!

ஆட்சியில் ...படியேனும் ஒட்டைபோல்ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்றஆவல், அடிப்படையையே தகர்த்து விடுகிறது. அன்று வேண்டாதது என்று தோன்றிய திட்டம் இன்று இன்றியமையாத வேண்டப்படுகிறது! அன்று வேம்பென கசந்தது; இன்று கரும்பென இனிக்கிறது! அன்று தூற்றுதலுக்குரித்தாயிருந்த சட்டதிட்டங்கள் இன்று போற்றுதலுக்குரியதாகிறது!

இவ்வளவும் "பலமான மத்திய சர்க்கார்" என்ற போர்வையிலே மறைக்கப்பட்டு விடுகிறது. இதனை ஏன் என்று கேட்பாரில்லை.

இப்படிப்பட்ட நிலையிலே, எப்படியேனும் ஆட்சிபீடத்தில் ஆடாதிருந்தால் போதும் என்று நினைக்கின்றனர். இந்த நினைப்பு தவறு என்கிறோம் நாம். இத்தகைய நினைப்பு, யதேச்சதிகார முறை முதலிய ஆட்சியைப் பலப்படுத்தாது. அதற்கு மாறாக விரைவில், ஆட்சி முறைக்கு அசைவை உண்டுபண்ணும். சுருங்கச் சொல்ல வேண்டுமானல், முன்ஷிகள் எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான பலன்களே விளையக்கூடும் எனலாம். ஏனெனில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பது எப்பொழுதும் ஆபத்தானது. அதிலும் இந்தியாபோன்ற ஒரு பெரிய நாடு, இயற்கையில் ஒன்றுபட்டு வாழமுடியாத பண்பாடுகள், கலச்சாரம், மொழி ஆகியவற்றைக் கொண்டநாடுவெறும் அடக்குமுறையினுல்மட்டும் ஆண்டுவிடக் கூடியதல்ல.

எனவே, இந்திய உபகண்டத்துக்கு அவசரமாகவும் அவசியமாகவும் வேண்டப்படுவது அன்பாட்சிமுறையேயன்றி, அடக்குமுறை ஆட்சி அல்ல. அந்தந்த மாகாணங்களுக்குப் பூரண உரிமைகளை வழங்கி, அந்த உரிமையோடு வாழும் மக்களின் ஒத்துழைப்பைப்பெற்று நல்லாட்சி நடத்தவேண்டும். அதுவே ஜனநாயகத்திற்கேற்ற,-காலத்திற்கேற்ற — கருத்துக்கேற்ற முறையாகும்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவையில்

மே 27, 28 சனி, ஞாயிறு நாட்களில்
நடைபெறும்

தலைவர் :
புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

திறப்பாளர் :
நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

இரு நாட்களிலும் சி. என். ஏ. குழுவினரின் நாடகங்கள் நடைபெறும்

நகைச்சுவை அரசர்
என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் வில்லுப்பாட்டு அரங்கு நடைபெறும்

இசைவாணர்கள், நடிகர்கள், இயற்றமிழ் புலவர்கள் பலரும் கலந்துகொள்வர்

வரவேற்புக் குழுவினர்

குறிப்பு :—தமிழைக் காத்து, வளர்த்து, அதற்கு ஆக்கந்தேடும் அரும் பணியினை ஆற்றிவர, "இலக்கிய மா மன்றம்" (Literary Academy) என்ற பெரும் மன்றத்தை மாநாட்டில் நிறுவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மா மன்றத்தில் பங்குகொள்ள விரும்பும் தமிழ் இலக்கிய புலமையுடையோர், கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் முகவரியுடன் அறிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

முகவரி :—இரா. நெடுஞ்செழியன், அமைப்பாளர்
"இலக்கிய மா மன்றம்" 2/45 முத்துமாரிச் செட்டித் ... சென்னை-1.

பிரான்சுக்கு பிரிட்டனின் உதவி

லண்டன், மே 11—

பிரான்சுக்கும், இந்தோசீனுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே உதவ பிரிட்டன் ஒப்புக்கொண்டிருக்கலாம் என்று இங்கு நம்பப்படுகிறது.

பிரான்ஸ் பிரிட்டனிலிருந்து பெற விரும்புவது என்ன என்பது திட்டமாகத் தெரியவில்லை. ஆனல் பிரிட்டனிலுள்ள ராணுவ விமானங்களைப் பிரான்ஸ் கேட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. அமெரிக்கா ஏற்கனவே ஆயுத உதவியையும் அளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

சீனவுக்குத் தந்திகள்

சென்னை, மே 10—

சீனவில் ஹோய்ஹோன் என்ற இடத்துக்கும், சீனவில் மற்ற இடங்களுக்கும் அனுப்பப்படும் தந்திகள் விஷயத்தில் அமுலிலிருந்துவரும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, இப்பொழுது தந்திகள் ஏற்றுக்கொள்ளப்படுமென்று வெளிநாட்டுச் செய்தி போக்குவரத்து ஸ்தாபனம் அறிவிக்கிறது.

கூதற்பலி

டபிள்யூ.வி. சுந்தரேசன் எழுதிய சிறுகதைத் தொகுதி தனிப்பிரதி விலை அணா நான்கு.
விபரங்களுக்கு : co "மாலைமணி"
326. சென்னை-1.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.
G. பழனியப்ப முதலியார், மதுரை.

ஏஜெண்டு தேவை

திருச்சியில் நமது 'மாலை மணி'யை விற்பனை செய்ய, முன் பணம் கட்டக் கூடிய பொறுப்புள்ள ஒரு ஏஜெண்டு தேவை.

மானேஜர்
"மாலைமணி"

ஐ. நா. விமானத்தை பூதவிமானம் தாக்கியது

அம்மான், மே 11—

ஐ. நா. விமானம் ஒன்றை, பூதவிமானம் தாக்கியதின் காரணமாக விடா விமான நிலையத்தில் இறங்க நேரிட்டது என்று தெரியவருகிறது. அந்த விமானத்தில் ஐ. நா பாலஸ்தீன பிரதமர் அப்ஸர்வர் ஜெனரல் ரிலி இருந்தாராம்.

இந்த விமானம், தடுக்கப்பட்ட பிரதேசத்தின் மீது பறந்ததாலேயே இந்த சம்பவம் ஏற்பட நேர்ந்தது என்று யூத வட்டாரங்களில் கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street. Madras-1.